மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.02/2021
அ.வ.எண்.180/2021

1. சின்னபொண்ணு
2. கற்பகம் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

செம்பன் ... எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதி

இம்மனு கடந்த 21.11.2023 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.மனோகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.K.சத்யபிரியா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்,

<u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39 விதிகள் 1, 2 மற்றும் பிரிவு 151-ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுவாகும்.

<u>1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம்</u> : -

வாதிகள்/மனுதாரர்களால் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 2ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர் மற்றும் ஷியாமலா ஆகியோருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்தாகும். கடந்த 30.10.1982ம் தேதியன்று தாவா சொத்தானது 1ம் மனுதாரரின் கணவர் ரத்தினம் மற்றும் எதிர்மனுதாரர் செம்பன் ஆகியோர் பெயரில் கூட்டாக வாங்கப்பட்டது. தாவா சொத்தை வாங்கும்போது 1ம் மனுதாரர் இளவராக இருந்ததால் 1ம் மனுதாரரின் சகோதரரான எதிர்மனுதாரரை பாதுகாவலராக

நியமிக்கப்பட்டார். தாவா சொத்தை வாங்கிய பிறகு பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வந்தனர். கடந்த 23.06.1993 ம் தேதியில் ரத்தினத்தின் மறைவிற்கு பிறகு மனுதாரர்களும், பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தனர். இந்நிலையில் எதிர்மனுதாரர் தாவா சொத்து தனக்கு சொந்தம் என கூறி 3 ம் நபருக்கு விற்க முயல்வதால் மனுதாரர்கள், எதிர்மனுதாரர் மற்றும் ஷியாமலா ஆகியோருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

<u>2) 2 ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு குறிப்பாணையின் பேரில் இம்மனுவின் எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:–</u>

(i) மனு பொய்யானது. சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லதக்கதல்ல. தாவா சொத்து பாகம் பிரிக்கப்படாத கூட்டுக்குடும்ப சொத்து என்பது தவறானது. கடந்த 30.10.1982 ம் தேதியன்று தாவா சொத்தானது 1 ம் மனுதாரரின் கணவர் ரத்தினம் மற்றும் எதிர்மனுதாரர் செம்பன் ஆகியோர் பெயரில் கூட்டாக வாங்கப்பட்டது என்பதும், தாவா சொதததை வாங்கும்போது 1 ம் மனுதாரர் இளவராக இருந்ததால் 1 ம் மனுதாரரின் சகோதரரான எதிர்மனுதாரரை பாதுகாவலராக நியமிக்கப்பட்டது என்பதும் உண்மை. தாவா சொத்தை வாங்கிய பிறகு பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வந்தனர் என்பதும், ரத்தினத்தின் மறைவிற்கு பிறகு மனுதாரர்களும், பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டாக அனுபவித்து வந்தனர் என்பதும் பொய்யானது.

(ii) தாவா சொத்து ஏற்கனவே உபய வாதிகளுக்குள் பாகம் பிரித்து தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள் என்ற உண்மையை மறைத்து மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். எதிர்மனுதாரர் தாவா சொத்து தனக்கு சொந்தம் என கூறி 3 ம் நபருக்கு விற்க முயல்வதாக கூறுவது மனுதாரர்களின் கற்பனையாகும். தாவா சொத்தை 1 ம் மனுதாரரின் கணவர் ரத்தினத்திற்கு கார்டியனாகவும், எதிர்மனுதாரர் தனக்காகவும் சேர்ந்து 30.10.1982 ம் தேதியன்று கிரயம் பெற்று, அதன்படி தாவா சொத்தை ரத்தினம் உயிரோடு இருக்கும்போது வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டு தனித்தனியாக வீடு கட்டியும், விவசாயம் செய்தும் வந்தனர். எதிர்மனுதாரர் அவருக்கு பிரிந்த பாக சொத்தில் ஓட்டுவீடு ஒன்றும், மெத்தை வீடு ஒன்றும் கட்டியுள்ளார்.

(iii) மேற்படி தாவா சொத்திற்குண்டான வருவாய் ஆவணங்களின்படி ச.எண்.315/2A3 ல் 0.18.0 பு.ஹெ. நிலமும், ச.எண்.315/1B ல் 0.02.0 பு.ஹெ. நிலமும் பட்டாவில் உள்ளது. மேற்படி ச.எண்.315/1 இதற்கு புதிய ச.எண்.315/1B ல் கிரயம் பெறும்போது 0.13 சென்ட் நிலம் விலைக்கு வாங்கப்பட்டு, அதில் 0.08 சென்ட் நிலம் அரசாங்கத்தால் ரோடுக்கு எடுத்து கொள்ளப்பட்டது. மேலும் ச.எண்.315/1 க்கான 0.02.0 பு.ஹெ. நிலத்திற்கான பட்டா எண்.1868 ல் ரத்தினம், செம்பன், குருநாதன், சிமுட்டுக்கண்ணன், தாண்டவன், கருவாயன், பூனையன், கூலுபையன் ஆகியோர் பெயர்களில் கூட்டாக உள்ளதால் மேற்படி நபர்களும் பாகப்பிரிவினை தாவாவிற்கு அவசியமான தரப்பினர்கள் ஆவர். ஆகவே மேற்படி தாவாவிற்கு அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

(iv) மனுதாரர்களின் பாக சொத்தை கூட்டு கிரையதாரர் என்ற முறையில் எதிர்மனுதாரர் விலைக்கு வாங்குவதற்கு முன்னுரிமை கொண்டவர். மனுதாரர்கள் தாவா சொத்தில் அவர்களின் பாகத்தை விலைக்கு விற்க முற்படும்போது எதிர்மனுதாரர் சந்தை மதிப்பிற்கு அல்லது அரசு வழிகாட்டி மதிப்பிற்கு விலைக்கு வாங்க தயாராக உள்ளார். தாவா சொத்துவிபரம் தவறானது. தாவா சொத்தில் அமைந்துள்ள வீடுகளை பற்றி குறிப்பிடவில்லை. தாவா சொத்து குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஏதும் முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :-

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் கடந்த 30.10.1982 ம் தேதியன்று தாவா சொத்தானது 1ம் மனுதாரரின் கணவர் ரத்தினம் மற்றும் எதிர்மனுதாரர் செம்பன் ஆகியோர் பெயரில் கூட்டாக வாங்கப்பட்டது என்றும், கடந்த 23.06.1993 ம் தேதியில் ரத்தினத்தின் மறைவிற்கு பிறகு மனுதாரர்களும், பிரதிவாதிகளும் தாவா சொத்தை கூட்டாக

அனுபவித்து வந்தனர் என்றும், இந்நிலையில் எதிர்மனுதாரர் தாவா சொத்து தனக்கு சொந்தம் என கூறி 3ம் நபருக்கு விற்க முயல்வதால் மனுதாரர்கள், எதிர்மனுதாரர் மற்றும் ஷியாமலா ஆகியோருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்து அதில் இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(ii) அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்தை 1ம் மனுதாரரின் கணவர் ரத்தினத்திற்கு கார்டியனாகவும், எதிர்மனுதாரர் தனக்காகவும் சேர்ந்து 30.10.1982ம் தேதியன்று கிரயம் பெற்று, அதன்படி தாவா சொத்தை ரத்தினம் உயிரோடு இருக்கும்போது வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டு தனித்தனியாக வீடு கட்டியும், விவசாயம் செய்தும் வந்தனர் என்றும், ச.எண்.315/1க்கான 0.02.0 பு.ஹெ. நிலத்திற்கான பட்டா எண்.1868 ல் ரத்தினம், செம்பன், குருநாதன், சிமுட்டுக்கண்ணன், தாண்டவன், கருவாயன், பூனையன், கூலுபையன் ஆகியோர் பெயர்களில் கூட்டாக உள்ளதால் மேற்படி நபர்களும் பாகப்பிரிவினை தாவாவிற்கு அவசியமான தரப்பினர்கள் என்றும், தாவாவிற்கு அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்று என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்கையில் வாதிகள்/மனுதாரர்களால் பாகப்பிரிவினை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி 2ம் பிரதிவாதி/எதிர்மனுதாரர் மற்றும் ஷியாமலா ஆகியோருக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அதே சமயத்தில் எதிர்மனுதாரர் தரப்பில் தாவா சொத்து ஏற்கனவே வாய்மொழி பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றும், அவசியமான தரப்பினர்களை தாவாவில் சேர்க்காததால் பாதிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது தெரியவருகிறது.

(iv) இச்சூழ்நிலையில் மனுதாரர்கள் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரப்பட்டுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டதாகவும், ஒத்த இயல்புடையதாகவும் உள்ளது தெரியவருகிறது. எனவே மேற்படி பிரச்சனைகளையும்,

அதன் தகுதிப்பாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்மானிப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

(v) மேலும் இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களது வாதங்களையும் கருத்தில் கொள்கையில் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது, தாவா சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என மனுதாரர்களால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும், தாவா சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் மனுதாரர்கள் உள்ளனரா? என்பதும், தாவா சொத்தில் மனுதாரர்கள் கோரியவாறு 4/12 பாகம் பெற உரிமையுடையவர்களா? என்பதும், எதிர்மனுதாரர் கோரியது போல் தாவா சொத்து ஏற்கனவே தரப்பினர்களுக்குள் பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டதா? என்பதும், தேவையான தரப்பினர்களை சேர்க்காததால் இவ்வழக்கு பாதிப்படைகிறதா? என்பதுமே ஆகும்.

(vi) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன் வைக்கும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க இயலும். மேலும் இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனையானது சட்டம் மற்றும் சங்கதி தொடர்புடைய எழுவினாவாக உள்ளது என தெரியவருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக தயார் நிலையில் உள்ளதை கருத்தில் கொள்கையில், மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின் பொழுது தரப்பினர்களால் முன்னிலைப்படுத்தப்படும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

(vii) மாண்பமை உச்சநீதிமன்றத்தால் "*Anand Prasad Agarwalla /Vs/ Tarkeshwar Prasad & Ors", reported in "2001 (5) SCC 568"* என்ற வழக்கில்,

> *"It may not be appropriate for any Court to hold mini trial at the stage of grant of temporary injunction."*

என்ற சட்டநிலைப்பாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரர்களால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற

வழக்கானது இருதரப்பு ஆவணங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என இந்நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்பமை உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் கூறியுள்ளபடி, இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணை நடத்த வேண்டிய அவசியமில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக, இம்மனு செலவுத்தொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 08 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.12.08 17:53:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை</u>

R MANIVARMAN
Digitally signed by R MANIVARMAN
Date: 2023.12.08 17:53:50 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.